**செய்தி வெளியீடு எண்: 829** **நாள்:04.11.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (4.11.2020) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 162 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 161 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 294 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 7.3.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், ‘‘ஆண்டிப்பட்டி மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களில் விடுபட்டுப் போன பகுதிகளுக்கு வைகை அணைக்கு கீழ் பகுதியிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்’’ என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 162 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 9 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெலகலஹள்ளி மற்றும் 39 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்;

கிருஷ்ணகிரி மாவட்டம், கீழமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராயக்கோட்டை மற்றும் 28 குடியிருப்புகளுக்கு 8 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

திண்டுக்கல் மாவட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு 9 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 42 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த 134 குடியிருப்புகளுக்கு 91 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

என மொத்தம் 324 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள குடிநீர் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், 46 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 135 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 1153 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் 6 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட அலுவலகக் கட்டடம்;

நகராட்சி நிர்வாகம் சார்பில் மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகக் கட்டடம்; தேனி மாவட்டம், தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர் குடியிருப்பு; ஆவடி, மாநகராட்சியில் 197 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 MLD சுத்திகரிப்பு நிலையம்;

என மொத்தம் 255 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், 21 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புடன் புனரமைக்கப்பட்ட 31 நீர்நிலைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் புனரமைக்கப்பட்ட 117 சமுதாய கிணறுகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் புனரமைக்கப்பட்ட 174 சமுதாய கிணறுகள், என மொத்தம் 291 சமுதாய கிணறுகள்;

சென்னை, திரு.வி.க. நகர், ஸ்டிரஹான்ஸ் சாலையில் 13 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மண்டல அலுவலகக் கட்டடம்; துரைப்பாக்கம், ராஜீவ் காந்தி சாலையில் 1 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையக் கட்டடம்; தேனாம்பேட்டை, கே.பி. தாசன் சாலையில் 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறப்பு காப்பகக் கட்டடம்; வில்லிவாக்கம், சிட்கோ நகர், 4வது பிரதான சாலை குடியிருப்பு பகுதியில் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா;

என மொத்தம் 39 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பெருநகர சென்னை மாநகராட்சி திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 நடமாடும் அம்மா உணவகங்கள், 4 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குப்பைகளை உறிஞ்சி அகற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட 15 சிறியவகை வாகனங்களை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு வழங்கிடும் விதமாக, அவ்வாகனங்களுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று 5 ஓட்டுநர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கே.பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**